## வகுப்பு - 7 - பருவம் - 3 - விலங்கியல்

## 19 - விலங்குகளின் இயக்கம்

36. டைஆர்த்ரோசிஸ் என அழைக்கப்படும் மூட்டு ______.

(1) குருத்தெலும்பு மூட்டு (2) சினோவியல் மூட்டு

(3) கீல் மூட்டு (4) வழுக்கு மூட்டு

37. மனித எலும்பு கூட்டின் நீளமான எலும்பு ______.

(1) பீமர் (2) இடுப்பு எலும்பு (3) விலா எலும்பு (4) தோள்பட்டை எலும்பு

38. மனித எலும்பு கூட்டின் மிகச்சிறிய எலும்பு ______.

(1) கைவிரல் எலும்பு (2) தாடை (3) மணிகட்டை (4) ஸ்டேபஸ்

39. கீழ்க்கண்டவற்றுள் எது தட்டையான எலும்பு அல்ல?

(1) மண்டை ஓடு (2) விலா எலும்பு (3) தண்டுவடம் (4) தோள்பட்டை எலும்பு

40. மண்டையோடு ______ எலும்புகளால் ஆன கடின அமைப்பு ஆகும்.

(1) 22 (2) 21 (3) 23 (4) 24

41. கீழ்க்கண்டவற்றுள் வேறுபட்ட ஒன்றை கண்டுபிடி

(1) மண்டையோடு (2) நுரையீரல் (3) இதயம் (4) கல்லீரல்

42. பாம்புகள் எவற்றின் உதவியால் இயக்கத்தை மேற்கொள்கின்றன?

(1) தசைகள் (2) கால்கள் (3) செதில்கள் (4) 1 மற்றும் 3

43. கூற்று: அனைத்து இயக்கங்களுக்கும் உடலில் உள்ள தசைகள் வழிவகை செய்கின்றன.

காரணம்: உட்காரும்போதும், நடக்கும்போதும், நிற்கும்போதும், உடல் தோரணையைப் பராமரிக்க தசைகள் உதவுகின்றன.

(1) கூற்று சரி காரணம் தவறு (2) கூற்று தவறு காரணம் சரி

(3) கூற்றும் காரணமும் சரி (4) கூற்றும் காரணமும் தவறு

44. புன்னகைக்க மற்றும் கோபப்பட எத்தனை தசைகள் தேவைப்படுகின்றன?

(1) 27, 57 (2) 17, 52 (3) 17, 42 (4) 17, 22

45. நமது உடலின் பின்வரும் பாகங்களுள், எவை உடல் இயக்கத்திற்கு உதவுகின்றன?

(i) எலும்புகள் (ii) தோல் (iii) தசைகள் (iv) உறுப்புகள்

(1) (i) மற்றும் (iii) (2) (ii) மற்றும் (iv) (3) (i) மற்றும் (iv) (4) (ii) மற்றும் (iii)

LIVEWORKSHEETS

46. பின்வரும் உயிரினங்களுள், எதில் இயக்கத்திற்குத் தேவையான தசைகள் மற்றும் எலும்புகள் காணப்படுவதில்லை?

(1) நாய் (2) நத்தை (3) மண்புழு (4) மனிதன்

47. நீருக்கடியில் நீந்துபவர்கள் காலில் துடுப்பு போன்ற ஃபிளிப்பர்களை அணிவதன் காரணம் ____

(1) நீரில் எளிதாக நீந்த
(2) மீனைப் போன்று தோற்றமளிக்க
(3) நீரின் மேற்பரப்பில் நடக்க
(4) கடலின் அடிப்பகுதியில் நடக்க

48. சரியான இணையைத் தேர்ந்தெடு.

(1) கழுத்தெலும்பு - 7
(2) மார்பெலும்பு - 10
(3) இடுப்பு எலும்பு - 4
(4) வால் எலும்பு - 4

49. பின்வருவனவற்றுள் அசையா மூட்டுகள் யாவை?

(1) தோள்பட்டை மற்றும் கை
(2) முழங்கால் மற்றும் முழங்கை
(3) மேல் தாடை மற்றும் மண்டை ஓடு
(4) முதுகெலும்புகளுக்கு இடையில் உள்ள மூட்டு

50. கூற்று 1: இடம்பெயர்தலானது, உயிரியல் நிலையில் நடைபெறுகிறது

கூற்று 2: இடம்பெயர்தலுக்கு ஆற்றல் அவசியம் தேவை இல்லை

கூற்று 3: இடம்பெயர்தல் தன்னிச்சையாக நடைபெறக்கூடியது.

(1) கூற்று 1, 2, 3 சரி
(2) கூற்று 1 தவறு 2, 3 சரி
(3) கூற்று 1, 2 சரி 3 தவறு
(4) கூற்று 1, 2, 3 தவறு

51. மனித உடலுக்கு கட்டமைப்பை வழங்குவது ______.

(1) எலும்பு மண்டலம்
(2) தோலுறுப்பு மண்டலம்
(3) தசை மண்டலம்
(4) நரம்பு மண்டலம்

52. மனிதனின் முகத்தில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை ______.

(1) 20 (2) 22 (3) 14 (4) 16

53. மனிதனின் முதுகெலும்பில் உள்ள முள்ளெலும்புகளின் எண்ணிக்கை ______.

(1) 30 (2) 16 (3) 36 (4) 33

54. மனிதனின் கழுத்தில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை ______.

LIVEWORKSHEETS

(1) 6 (2) 7 (3) 12 (4) 30

55. மனிதனின் மார்பெலும்பில் தனித்துக் காணப்படும் விலா எலும்புகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) இணையா விலா எலும்புகள் (2) மிதக்கும் விலா எலும்புகள்

(3) தனித்த விலா எலும்புகள் (4) கடின எலும்புகள்

56. ஒரே திசையில் மட்டும் செயல்படக் கூடிய எலும்பு _______.

(1) இடுப்பு எலும்பு (2) கால் எலும்பு (3) விலா எலும்பு (4) முள் எலும்பு

57. வெளிப்புறக் காதினைத் தாங்குவது _______.

(1) எலும்பு (2) குருத்தெலும்பு (3) தசை நார் (4) காப்ஸ்யூல்

58. _______ எலும்புகள் இணைந்து கிரேனியம் உருவாகிறது.

(1) 6 (2) 9 (3) 8 (4) 3

59. டை ஆர்த்தோசிஸ் மூட்டு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) கீல் மூட்டு (2) வழுக்கு மூட்டு (3) நெகிழ்வு மூட்டு (4) சேண மூட்டு

**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

60. கடினமான தோலால் மூடப்பட்டுள்ள எலும்பின் வெளியுறையின் பெயர் (NMMS-2012)

(1) எலும்பு மஞ்சை (2) பெரியாஸ்டியம் (3) தசை நாண்கள் (4) குருத்தெலும்பு

61. மனித உடம்பில் காணப்படக்கூடிய மிக நீளமான எலும்பு (NMMS-2012)

(1) காரை எலும்பு (2) தொடை எலும்பு (3) மார்பு எலும்பு (4) மண்டை ஓட்டு எலும்பு

62. சரியான பொருத்தம். [NMMS-2012]

| திரவ மூட்டுகள் | | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| (i) பந்து கிண்ண மூட்டு | - | (A) முழங்கை |
| (ii) கீல் மூட்டு | - | (B) கணுக்கால் எலும்பு |
| (iii) வழுக்கு மூட்டு | - | (C) கழுத்து முள் எலும்பு |
| (iv) முளை மூட்டு | - | (D) இடுப்பு எலும்பு |

(1) (I) - (B) (ii) - (C) (iii) - (D) (iv) - (A) (2) (i) - (C) (ii) - (D) (iii) - (B) (iv) - (A)

(3) (I) - (A) (ii) - (C) (iii) - (D) (iv) - (B) (4) (i) - (D) (ii) - (A) (iii) - (B) (iv) - (C)

63. பொருத்துக. (NMMS-2014)

(a) மண்புழு (i) அலை அலையான இடப்பெயர்ச்சி

(b) பறவை (ii) காற்று அல்லது வாயுக்கள் நிரப்பப்பட்ட பை

LIVEWORKSHEETS

(c) எலும்பு மீன்கள் (iii) தசை மற்றும் சீட்டாக்கள்

(d) பாம்பு (iv) உட்குழியுள்ள எலும்புகள்

(1) (a) - (iii) (b) - (ii) (c) - (i) (d) - (iv) (2) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii)

(3) (a) - (iii) (b) - (iv) (c) - (ii) (d) - (i) (4) (a) - (i) (b) - (ii) (c) - (iii) (d) - (iv)

64. பொருத்துக (NMMS 2019 - 2020)

(A) சினோவியல் திரவம் - i. நீளமான அச்சை மட்டுமே பற்றி சுழல அனுமதிக்கிறது.

(B) கீல் மூட்டு - ii. எலும்புடன் எலும்பை இணைக்கிறது.

(C) சுழலச்சு மூட்டு - iii. மூட்டுகளை வளைக்கவும் நேராக்கவும் மட்டுமே அனுமதிக்கிறது.

(D) தசைநார் - iv. மூட்டுகளிலுள்ள குறுத்தெலும்புகளுக்கு இடையிலான உராய்வைக் குறைக்கிறது.

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| (1) | iv | iii | i | ii |
| (2) | i | iv | ii | iii |
| (3) | ii | i | iii | iv |
| (4) | iii | ii | iv | i |

65. தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும் **(NMMS 2019-2020)**

(1) ஃபீமர் - வலிமையான எலும்பு

(2) கால் விரல்கள் - டார்சல்கள்

(3) முழங்கால் - பட்டெல்லா

(4) ஸ்டேபஸ் - லேசான எலும்பு

66. தவறான இணை / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும் **(NMMS 20 - 21)**

i. கீல்மூட்டு - ஒரு திசையில் மட்டுமே இயக்கம்

ii. முண்டணையா மூட்டு - மூன்று திசைகளில் இயக்கம்

iii. பந்துக் கிண்ண மூட்டு - இரண்டு திசைகளில் இயக்கம்

**(1)** i மட்டும் **(2)** iii மட்டும்

**(3)** i மற்றும் iii மட்டும் **(4)** ii மற்றும் iii மட்டும்

LIVEWORKSHEETS